சுருக்கம்

போக்குவரத்துத் துறை – அரசு போக்குவரத்துக் கழகங்கள் – கனரக வாகன ஓட்டுநர் பணியிடத்துக்கு கல்வித் தகுதியை குறைத்தல் குறித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

போக்குவரத்து (சி1) துறை

அரசாணை (நிலை) எண்.263 நாள்: 08.10.2010.

படிக்கவும்:

அரசாணை (நிலை) எண்.64, போக்குவரத்துத் (சி1) துறை, நாள் 23.2.1999.

--------

ஆணை:-

பார்வையில் உள்ள அரசாணையில் கனரக வாகன ஓட்டுநர் பதவி நியமனத்திற்கு பணி விதிகள் நிர்ணயிக்கப்பட்டது. அவற்றுள் கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு அல்லது எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்ட உயர அளவு 160 செ.மீ. என்றும் ஆணை வெளியிடப்பட்டது.

2. தற்போது கனரக வாகன ஓட்டுநர் பதவி நியமனத்திற்கான கல்வித் தகுதியினை பத்தாம் வகுப்பு தேர்ச்சியிலிருந்து எட்டாம் வகுப்பு தேர்ச்சி எனக் குறைப்பதற்கும், நிர்ணயிக்கப்பட்ட உயர அளவினை 160 செ.மீ. இருந்து குறைப்பதற்கான கருத்துருவினையும் அரசு பரிசீலனை செய்தது.

3. அரசால் இக்கருத்துரு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. கனரக வாகன ஓட்டுநர் பதவி நியமனத்திற்கு கல்வித் தகுதி, பத்தாம் வகுப்பு அல்லது எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என்பதிலிருந்து எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என குறைத்தும், நிர்ணயிக்கப்பட்ட உயர அளவு 160 சென்டிமீட்டரை, தேவை ஏற்படின், அரை சென்டிமீட்டர் குறைந்தாலும் ஏற்கலாம் என்றும் நிர்ணயித்து ஆணையிடப்படுகிறது.

4. மேற்கண்ட ஆணையை செயல்படுத்த பொதுப்பணி விதிகளுக்கு (Common Service Rules) தக்க திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகின்றன.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ்ராம் மிஸ்ரா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

நிர்வாக இயக்குநர், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9. உள்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை –9.போக்குவரத்து அமைச்சரின் தனிச்செயலர், சென்னை–9.